நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.218/2021
அரசு தரப்புக்காக அ. சா.8 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.முருகேசன் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W.15 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of March 2026.

**<u>முதல் விசாரணை</u>**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 12.19)

நான் தமிழ்நாடு காவல் துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். 2019 ஆம் ஆண்டில் சிதம்பரம் நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 03.11.2019 ஆம் தேதி சிதம்பர நகர காவல் நிலைய குற்ற எண்.337/2019, சட்டப்பிரிவு 174(3)– குவிமுச படி முதல் தகவல் அறிக்கை திரு.பாஸ்கர் உதவி ஆய்வாளர் அவர்கள் பதிவு செய்து வைத்ததை காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ஜவகர்லால் அவர்கள் முதல் கட்ட விசாரணையை முடித்து அப்போது சிதம்பர நகர காவல் ஆய்வாளராக பணியில் இருந்த எனக்கு மேல் நடவடிக்கைக்காக வழக்குகோப்புகளை அனுப்பிவைத்தார். இவ்வழக்கினை நான் என் புலன் விசாரணை எடுத்துக்கொண்டு சம்பவ

இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டத்தில் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் தயார் செய்த பார்வை மகசர் மற்றும் வரைபடம் ஆகியவற்றில் உள்ள விவரங்கள்படி இருந்ததால் நான் தனியாக இந்த ஆவணங்களை தயார் செய்யவில்லை. அன்றே சாட்சிகள் முருகதாஸ், சத்தியகுமாரி, முரளிதரன், தேவேந்திரன், மாசிலாமணி, பாலு, சந்தோஷ்குமார் இவர்களை தனிதனியே விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையில் இருந்து மேற்படி சம்பவம் உண்மை என்று தெரியவருவதால் புகார்தாரர் கொடுத்த தகவலின் பேரில் இவ்வழகின் எதிரி வினோத்குமார் என்பவரை 06.11.2019 அன்று மதியம் 14.00 மணிக்கு சிதம்பரம் ஓமக்குளம் பெட்ரோல் பங்க் அருகில் கைது செய்து கைது செய்த காரணத்தை தெரிவித்தும் எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் கணேசன், ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து கையெழுத்து பெற்றேன். மேலும் எதிரியுடம் நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்படைத்தும் தக்க வழிகாவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உத்தரவு கேட்டு அனுப்பிவைத்தேன். 28.06.2020 ஆம் தேதி இவ்வழக்கில் இறந்துபோன பிரேதமான அபிராமி என்பவரின் பிரேதத்தை கூராய்வு செய்த டாக்டர் அமீதா சிதம்பரம் அரசு மருத்துவமனை என்பவரை விசாரணை செய்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் பிரேத பரிசோதனைக்கு அலுவலாக சென்ற பெண் முதல் நிலைக்காவலர் 1834 பிரபா என்பவரை விசாரித்தும் மற்றும் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு.பாஸ்கர் என்பவரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் புலன்

விசாரணையை முடித்து குற்ற தொடர்வு துறை இணை இயக்குநர் அவர்களின் கருத்துரை பெற்றும் இவ்வழக்கின் சட்டப்பிரிவு 306 இதச பிரிவிலிருந்து 498(A), 306 இதச பிரிவாக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். (அந்த 28.06.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) இந்த வழக்கில் சிதம்பரம் உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் இறந்த நபரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். அதை நான் பார்வையிட்டேன். (அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது). வழக்கின் அனைத்து புலன் விசாரணையையும் முடித்து குற்ற தொடர்வு துறை துணைஇயக்குநர் அவர்களிடம் கருத்துரை பெற்று இவ்வழக்கின் எதிரி வினோத் என்கிற வினோத்குமார் என்பவர் மீது இதச பிரிவுகள் 498(A), 306 –ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அ.சா.1/முருகதாஸ் என்பவர் நான் விசாரித்தபோது என் மகள் இறப்பில் சந்தேகம் இருந்ததால் நாங்கள் சாலை மறியல் செய்தோம் சாலை மறியலை விட்டுவிட்டு நாங்கள் மாவட்ட ஆட்சியரிடம் சென்று ஒரு மனு கொடுத்துவிட்டு நாங்கள் வந்துவிட்டோம் மாவட்ட ஆட்சியரை பார்த்த பிறகு 03.11.2019 தேதியில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை.

அ.சா.1/முருகதாஸ், அ.சா.2/சத்தியகுமாரி, அ.சா.3/முரளிதரன் ஆகியோர்கள் என்னுடைய விசாரணையில் அபிராமியை கடந்த இரண்டரை வருடங்களுக்கு முன்பு வினோத்குமார் அழைத்து சென்று

திருவந்திபுரம் கோவிலில் திருமணம் செய்து கொண்டார் மேற்படி திருமணம் எங்களுக்கு தெரியாமல் நடந்ததால் நாங்கள் அவர்களது திருமணத்தை ஏற்காமல் பேச்சுவார்த்தையின்றி இருந்தோம் என்று சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார்கள்.

அ.சா.1/முருகதாஸ், அ.சா.2/சத்தியகுமாரி, அ.சா.3/முரளிதரன் ஆகியோர்கள் என்னுடைய விசாரணையில் அபிராமிக்கு ஒன்றரை வயதில் அனன்யா என்ற பெண் குழந்தை உள்ளது. அபிராமியும் வினோத்குமாரும் நல்லமுறையில் குடும்பம் நடத்தி வந்தார்கள். என் மகள் காதல் திருமணம் செய்துகொண்டதால் அவருக்கு சீராக செய்யவேண்டியையதையும் நாங்கள் செய்யவில்லை. இதனால் இரு குடும்பத்தினரிடையே பேச்சு வார்த்தை எதுவும் இல்லாமல் இருந்தது என்று சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார்கள்.

நான் விசாரித்த அனைத்து சாட்சிகளும் உறவினர் மகளுக்குதான் திருமணம் நடந்ததாக சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார்கள்.

என்னுடைய விசாரணையில் அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோர் அவர்களை முதலில் சிதம்பரம் DSP விசாரித்தபோது என் மருமகன் வரதட்சணை கேட்டு துன்புறுத்தினார்கள் என்று சொன்னால் வினோத்குமார் மீதும் அவரது குடும்பத்தினர் மீது போலிசார் தீவிர நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்பதினால் அபிராமி அவரது கணவர் குடும்பத்தினர் வரதட்சணை கேட்டு கொடுமை செய்ததாக தவறுதலாக சொல்லிவிட்டோம் ஆனால் அம்மாதிரி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று என்னிடம் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான்.

திருமணம் நடைபெற்றதாக சொல்லப்படும் அபிராமியின் உறவினரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை.

அ.சா.2/சத்தியகுமாரி வினோத்குமார் மீதும் அவரது குடும்பத்தினர் மீது வேறு ஏதேனும் புகார் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை.

எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றும் அவர் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்திலேயே தயார் செய்யப்பட்டது என்றும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் ஆஜர் எதிரியின் மீது தவறான இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னல் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 12.52)

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.